
உ

சிவமயம்

இலவச வெளியீடு

சைவ சமய ஞான விருத்தி நிலைய பதினோராவது வெளியீடு.



# அருணகிரிநாதர்

# திருமுருகாற்றுப்படை

அன்பளிப்பு:

திரு சி. உலகநாதபிள்ளை அவர்கள்

(சீதா சோடாக் கொம்பனி அதிபர்)

375, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

சிவமயம்

# முன்னுரை

*மனமே நினைந்திடாய் வல்வினை நோய் மாற்றும்*
*தனமேவு செல்வர் தழைக்கும் — சினமேவு*
*பொங்கரவ கங்கணவ புங்கபுர கங்கைமகன்*
*சிங்கபுரஞ் செங்கமலத் தாள்.*

அருணகிரிநாதரின் வரலாறும், அவர் பாடிய நூல்களும் வரையறுத்துச் சரிவர ஒருவராலும் எடுத்தியம்ப முடியாதவாறு மறைபொருள்களாக அனேகம் இருக்கின்றன.

என் குருவாகிய சுதுமலை சாஸ்திரியார் ஆ. சிந்நயபிள்ளை அவர்களிடமிருந்து ஏட்டுப்பிரதியாக அருணகிரிநாதர் பாடிய திருமுருகாற்றுப்படையும், (ஒவ்வொருபடை வீட்டுக்கும் மூல மந்திரங்களும் யந்திரமும் கொண்டதாய்) ஆறுமுகசத்து சங் காரமும் அடியேனுக்குக் கிடைக்கப் பெற்றுத் திரும்பவும் அவரைக் கொண்டே கையெழுத்துப் பிரதியாக எடுத்து அடி யேன் பத்திரப்படுத்திப் பாராயணம் பண்ணி இதை மற்றவர் களுக்கும் பரப்பவேண்டும் என்னும் சித்தத்துடன் முருகனை வேண்டி வந்தேன். வேண்டியது தற்பொழுது கைகூடிற்று.

இந்நூலை நன்கு ஆராய்ந்து பிரதிபேதங்கள் எடுத்துத்தந்து, பிழை திருத்தம் செய்து உதவிய முன்னாள் திருநெல்வேலிச் சைவாசிரியக் கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் பண்டிதமணி **திரு சி. கணபதிப்பிள்ளை** அவர்களின் நன்றிக்கு என்றும் கடமைப்பாடுள்ளேன்.

இந்நூலை அச்சிட்டு வெளியிடப் பொருளுதவி தந்து பேரு தவி புரிந்து ஊக்கம் கொடுத்த அன்பர்களுக்கும் முருகனின் திருவருட் துணைகொண்டு நன்றி பாராட்டுகிறேன்.

அருணகிரிநாதரின் மந்திரசக்தி பொதிந்த இவ்வரிய நூலை எல்லோரும் அறிந்து பாராயணம் செய்து சகல இன்னல்களி னின்றும் விடுபட்டுச் சகல சித்திகளையும் பெற்று, நோய், துன்பம், பேய் துஷ்ட தேவதை யணுகாது நற் சுக வாழ்வு பெற்று வாழவேண்டுமென்று முருகனடி நினைந்து சைவ சமய ஞான விருத்தி நிலையப் பெயரால் இதனைச் சமர்ப்பிக்கின்றேன்.

இங்ஙனம்

**அ. செல்வத்துரை**

முருகனடியான்.

உ

சிவமயம்

முருகன் துணை

# அருணகிரிநாதர் அருளிச் செய்த

# திருமுருகாற்றுப்படை

**கலித்துறை**

கருமுருகாருங் குழல்வள்ளி கேள்வன் கருதலரைப்
பொருமுரு காதிபனைக் காட்டிடெனக் கெனப் போந்து
[சொன்ன
அரிமருகா நிற்கன்றங்கண் ணருண கிரியுரைத்த
திருமுருகாற்றுப்படை கொண்டவா செந்தி மன்னவனே.

## வருமுருகாற்று

ஓம் செய செய வருக வருக முருக வருக
யாழ்வாசி மாணிஷட்ட புண்டரீக யோகாமுக ங்களிற்
குண்டலங் குழைபல கண்டம தணிந்து
ஆரமும் நூலும் மார்பினின் றிலங்கச்
செச்சைத் தொங்கலும் கச்சுடை மருங்கும்
ஆறிரு நயனமும் மயூரமுங் கலாபமும்
வாழியோங்கிய கோழிப் பதாகையும்
கண்டையும் மணியும் புண்டரீகமும்
வேதவொலி பாடும் கீதகிண் கிணியும்
அதல விதல சுதல நிதல
தராதர மகாதல பாதாள லோகமும்
அண்ட ரண்டங்களு மெண்டிசை பரவச்

சிறகினி லெழுவரைப் பறிய வீசும்
மரகதக் கலாப நிருத குலதுரக
மேருப் பருவாய் புயங்கண் மணிவாய்
கீன்றூற் பொசிக்கும் மாருதப் பிரசண்டம்
மயிலுங் கடம்பும் அயிலும் பிரதாபமும்
பன்னிரு கண்ணும் என்னிரு கண்முன்
நீங்கா திருக்கப் பாங்குடன் வந்து
என்னிடர்தீர நின்னருள் நியமக் கந்தசுவாமி
கார்த்திகேயாய வால சுப்பிர மணியாய
சரணஞ் சரணம் செய்பவ சரணம்
சரவண பவாய சண்முகாய
நின்னடி சரணம் சரண நின்னபயம்
புகுந்தெனைக் காய்ந்த மாந்தரைக் காய்ந்த
கந்த இந்திரன் பயந்த தந்திச்
சந்தனந் திமிர்ந்த தந்த விம்பக்
தொங்கை தங்கும் அம்பிகை குமரா
அமரர் பெரிய சிறைதனை விடுத்த
தேவ தேவ தேவாகிய
மூவா மூர்த்தி யோகா காரப்
பெருஞ்சோதி சொற் சமய
ஏகமாய் நின்ற யோக நாதா
அபயமென மற்சமயந் திரண்டு
வேணிமீது பாணி குவித்துப்
போற்றிப் போற்றியென் றேத்திக் கொண்டிறைஞ்சி
குஞ்சர முகத்தோன் ஐந்து கரத்தோன்
கெசமுக சூராம் சூறைக் காற்றூல்
ஒன்னலர் காலன் வன்னி மேருக்
கொண்டல் போல அண்ட நிமிர்ந்த
சண்டமூடிகம் மண்டி யேறு

முக்கண் மூர்த்தி விக்கின விநாயகன்
வெற்புமை யளித்த கற்பக சகோதரன்
புட்ப புரத்துறை யப்பரமேசுவர
விமலர் பாகக் கமலா சனத்தி
வன்னி மண்டலத் தன்ன சரீரிணி
யண்டர் மண்டல குண்டல நீலி
கோலா கலத்தி மாலா மனத்தி
மூலா வெழுத்தின் மேலா யுதித்த
காலா புரத்தி சேலார் விழிச்சி
பாகா மொழிச்சி வாகார் மறைச்சி
யேகா வடத்தி நாகா புயத்தி
யால கால மூனி பாலா
வேலாயுதா சாலாமதி சாலாமென வேலவா
பேரணி நெருங்கிச் சூரனை மோதி
மூனி மூரிசூரி வாரி தாரி
மேருவுங் கிழிந்து
அண்டர் சேனை மண்டி யார்த்தெழ
அறுபதினுலும் பிரிவுட னமைத்துக்
கரத்தி பயிரவி யுரத்தி சங்கரி
யகோர சங்கரி யகோர சமர பயிரவி
யமரா வயிரவி குமரி வீற்றிருப்ப
ஆதி சூலமும் பூதப் படையும்
குமரி யிவுளி கவரி வீசிடக்
காள மேகக் கூளி குவித்து
எல்லைக் காகம் மெல்லெப் போர்த்துச்
சிறுகோடல் குறிஞ்சி யறமிக வெகுண்டு
பரம சுகத்தின் றமருக மெடுத்துப்
பயிரவர் கோடி பவுரி நின்றாட
டமடம டவிலுங் கரடி யிடக்கையும்
பாட்டுக் கடைசியில் பார்க்கவும்

டிமிடிமி டிமிடிமி டடியென்று
அலகை கலக முலகவீறு மிப்பக்
காளி கொட்டக் கூளி நின்றாட
ஆதி விதரண சோதி மூர்த்தி
அரனருள் குமர பரம தேசிக
சூர விகட சூரசிர விகடபாத
வீர ராகுத்த சூரரா துட்ட
சூரா வயிர சூறைக் காற்று
மாரன் மைத்துன வீர கீர்த்தி
கரவட பத்திரசாயி சட்சக்கிர பாணி
அரியரி வாதத் துரித சூரிய
ஆதி நாராயணன் மூரி மாதவன்
சகல ரூபினன் அகில நாயகன்
விண்ணவ ரேத்து மன்னன் மாவிருஷி
[illegible]சவன் மாதவன் கோசறு பரமன்
ஒளிகட[illegible] கானவன் சகடு மோதின
நீல மேனியன் காளி நாயகன்
மருக வருக வெனவாய் வெருவா
முன்னம் போற்றிப் போற்றிப் புகழ்ந்து
உன்னை யெப்போதும் உன்னிணையடி மலரிட்டு
ஏத்துவார் முன்னி மைப்பில் வருகவே.

நிகர மகா நிருதர் மடிய
மகர சலதி மறுகச் — சிகரி
தகர வேல் வாங்குஞ் சண்முகனைச் சற்றே
பகர வேபோமே பகை.

**வருமுருகாற்று முற்றிற்று**

---

பிரதிபேதம்:-ஒரு பிரதியில் 65ம் வரிக்கும்66ம் வரிக்குமிடையில்:

“குறைத்தலைக்கூளி யறப்பெரு வேழமு
நள்ளிருளாடுங் கொள்ளிக் கணங்களும்
ஏக பாதப் பூதப் பசாசும்
பல பல வேடத் தலகை குவித்து”

என்னும் வரிகள் கூடுதலாக இருக்கின்றன.

உ

சிவமயம்

முருகன் துணை

# பொருமுருகாற்று

**ஓம்** இந்திரர் இடமுஞ் சந்திரர் வலமும்
ஏழுகட விடமும் மழுவது வலமும்
ஆசறு மயிலும் வீசிய வேலும்
தாமரைத் தடாகமும் பூமலர்ப் பொழிலும்
பற்மராகமுங் கற்பகக் காவும்
வண்டமிழ் தெரியுஞ் சண்ட மாருதமும்
தவநெறிச் சைவமும் சிவநெறிச் செல்வமும்
சக்கிரபாணியும் விக்கின விநாயகனும்
நலம்புரிவோனும் வலம்புரி வாகனும்
போற்றிய பொன்மை மாற்றிய மகிபனும்
எழுகடற் கரசனுந் தொழுகடற் சுருதியும்
அங்கிஷத் தமனரும் எண்டிசைக் கிரியும்
பெருக்கிய வருமறை சுருக்கிய தோன்றலும்
வச்சிர வடிவும் மெச்சிர வருளும்
ஆகத் தோன்றிய வேகத் தோருரு
ஆன்ற பச்சை யீன்ற சுடர்மணி
மரகதம் வயிரம் விரை செறி கழுநீர்
நித்திலம் பவளக் கொத்துட னிலங்கச்
சொல்ல வரிய கல்லகம் பதியினில்
ஏன்றமேக மூன்றிய பொழிற்சூழ்
தேனயர் குழலியை வானவர் முன்னே
மணமலி செய்து பிணிபல தீர்த்தும
தருவோன் மேனி யெரியன லாக்கி
உம்பர் பாதம் பைப்பொற் சிறடி

இந்து கணைக்கால் முந்து குறங்கு
வரிதாள் மறலி கிரிதா முந்தி
எரிதான் வயிறு திருமா லுரோமம்
மனமே மலரோன் புவனமே யெழுச்சி
யெழுத் திருமாரன் கழுத்தி னிளையன்
ஒருதோள் வசிட்டன் ஒருதோள் இந்திரன்
ஒருதோள் சந்திரன் ஒருதோள் பார்மகள்
ஒருதோள் நாமகள் ஒருதோள் பூமகள்
ஒருதோள் சுருதி ஒருதோள் பருதி
ஒருதோள் திருமால் இருதோள் சத்தரிஷியும்
[வருணனுமாகப்
பன்னிரு தோளுந் மன்னருஞ் சிறக்க
ஓங்கிய திருக்கையில் வாங்கிய வேலும்
மாவுடைக் கொண்ட சேவலங் கொடியும்
அங்கிஷ வேல்மேற் றங்கிய சூலமும்
பாசமுஞ் சங்கும் வீசிய சக்கரம்
வச்சிர மழுவாள் விற்சர மெனவே
இலங்கின திலங்கத் துலங்கின துலங்கச்
சேரார் மெய்யில் சோரா கையும்
கூறரிய ஆறுமுகத்தினில்
ஒருமுக மீசன ஒருமுகம் உருத்திரன்
ஒருமுகம் மாதவன் ஒருமுகம் வேதியன்
ஒருமுகம் ஆதித்தன் ஒருமுகம் விநாயகன்
பெற்ற கொற்றக் காதின்
அண்டருமறியா வெண்டிசை யாதி
மஞ்சணி கண்டன் பிஞ்சணி பிறையன்
ஆடம்பணி வேடுவர் விநாயகன்
கொலைறைச் செங்குரவன் மன்ற வெருக்கணை
சேர்ந்த செஞ்சடை வாய்ந்த முடியினன்

அயிலொடு தோகை மயிலின் மேலேறி
ஞாலஞ் சுழல வேலுஞ் சுழற்றிக்
கால கோலம் போலத் திரியும்
சூரனுடலை வேரறத் துணித்துக்
கணங்களும் பூதமும் வணங்கி யேத்தப்
* புவிச் சென்றெடுத்து
மெய்வா ளெயிற்றுப் பைவாயரவம்
ஈன்ற மணியெனத் தோன்றிய சுடரே 60
ஒப்புனக் கெதிரிலை யெப்புவி யிடத்தும்
முன்பா மென்ன வொருமை பூண்டு
வல்லிபாகம் மெல்லென வணைத்துப்
பூங்கொடி மகளிர் வீங்கிள முலைமேல்
அணைத்தும் புணர்த்தும் மகிழ்ந்தும்
போற்ற வரிய எம்பெருமானே
கூத்தன் தந்தருள் கோமளக் குன்றே
வாக்கு மனமும் திருவு மளியா
தாக்கும் குமரா உனதருள் அலதிலலே 69

வருபிணியைக் காக்கும் பவப்பிணியைப் போக்கும்
குருவருளை நல்குங் குமரன் — பொருமயில்
வட்டச் சுற்றக் கடலை மற்றைச் சக்கிரக் கிரியை
விட்டுப் பட்டுப் பறியும் வேல்.

பொருமுருகாற்று முற்றிற்று.

---

* புவிதோறெடுத்து பல்சென்றெடுத்த — பி. பேதம்

உ
முருகன் துணை

# அணி முருகாற்று

ஓம் பொன்னிற மேனியும் பொற்பமர் வடிவும்
மின்னுறு முகமும் விழிகள் பன்னிரண்டும்
நீறணி நெற்றியும் நீணகை வாயும்
கூரொண் வடிவுடை கூரிய மூக்கும்
ஆரஞ் சிறந்த மணித்திருக் கழுத்தும்
பார குண்டலங்கள் பற்றிய குழையும்
முந்நூன் மார்பும் முழுமணி வடமும்
பன்னிரு கரத்திற் பதித்த வாயுதமும்
வேல் வாள் கப்பணம் வெயிலொளி வச்சிரம்
பானிறக் குக்குடம் பரிசை பொற்றண்டம்
வரதமபய மிருதலை மாணிக்கம் சூலம்
சரமொடு சக்கரம் தன்கரத் திலங்கச்
செச்சை மாலையும் சீரார் மருங்காய்
வைச்சுடுத்திய தோர்மருங்கில் வெண்டுகிலும்
* சதங்கை கிண்கிணி தாரமணி யிணங்கப்
பதங்களிடப்பதம் பரிவுடன் ளித்து
மற்ற வலப்பதங் கீழ்பெற நீட்டி
உற்றதோ ரட்சரம் உறுதியாயளித்து
ஆறுகோண அட்சரம் அதனிலா றெழுத்துற
நடுவிலிருத்தி நடு ரேங்கார
றீங்காரத்தால்
கோணமா மறையோர் குலவு ரூங்காரத்தால்
பூணவளைத்துப் பெம்மானின் னிடைத்

---

* சதங்கையுந் தண்டையுந்தனை அணிகின்ற பதங்களிடத்து.................................. பி. பேதம்

தெய்வ யானையைச் சீரிடப்புறத்திலும்
உய்ய வைத்து உயர்புறத்தணைத்து
மற்ற தோர்பாகம் வள்ளிநாயகியும்
உற்றங் கணைத்து உக்கிரமோ டிருத்தி
இரட்டைக் கவரி இருமருங் கசைய
மருட்டினை நீக்கிய மனத்தொடு மன்பொடுந்
தேவர் தானவர் சித்தர் வித்தியாதரர்
கின்னரர் கிம்புருடர் கெருடர் காந்தருவர்
தும்புரு நாரதர் முனிவர்கள் போற்றும்
ஓம் ஆறுமுக பவ
ஓம் சரவண பவ
ஓம் சயிலொளி பவ
ஓம் சரசோதி பவ
ஓம் திரி புர பவ
ஓம் திகழொளி பவ
ஓம் திருமேனி பவ
ஓம் நமோ ஓம் நமோ வென்று
உரமுள்ள மந்திரம் உறுதியோ டுரைத்துச்
சூழநின் றிருபுறம் தூயமலர் கொடுத்து
வாழியென் றேத்தி மலரடி பணிந்து
வேண்டிய வரங்கள் விருப்புட னளித்து
ஆண்ட நாயகமே யற்புதக் கொழுந்தே
அமரர் நாயகமே யறுமுகத் தரசே
எமதுயிர்த் துணையே ஏககர்த்தாவே
நின்னை யுன்னிடத் தெய்வ யானையும்
மற்றப் புறத்திடை வள்ளி நாயகியும்
பச்சை மயிலும் பரிந்தென் னிருதயத்து
இச்சை யுடனே இனிதிருந் தருளே.

மனமே நினைந்திடாய் வல்வினை நோய் மாற்றும்
தனமேவு செல்வந் தழைக்கும் — சினமேவு
பொங்கரவ கங்கணவ புங்கபுர கங்கைமகன்
சிங்கபுரஞ் செங்கமலத் தாள்.

அணிமுருகாற்று முற்றிற்று.

உ

சிவமயம்

## நன் முருகாற்று

கந்தன் எந்தை கருத்துறை கடவுள்
ஒருபிறப் பதனில் இருபிறப் பாளன்
மூன்று வண்ணமாய் முத்தீவளர்த்து
நான்மறை யோதி ஐவகை வேள்வி
அமைத் தாரங்கள் முதலெழுத் தோதி
எண்வகைக் குள்ளோர் ஒன்பது வாசல்
ஒருவகைப் படுத்திப்
பத்துத் திசைக்கும் பரிவுறப் பகிர்ந்து
எத்திசை யோர்க்கும் இனிதுறை கேள்விக்
கங்கையொண் சடையோன் கந்தசுவாமி
கடகரி முகத்துக் கணபதிக் கிளையோன்
திருமால் மருகன் செய்ய சேவகன்
தெய்வ யானையும் வள்ளியுஞ் சிறந்தோன்
குன்றெறி குமரன் குராநிழற் கொற்றவன்
என்று மிளையோன் ஏத்தினர்க் கெளியோன்
கடம்பணி தாரோன் கந்தனென் சென்னியன்
மூவிரு முகமும் முகத்திரு கண்களும்
ஆறிரு புயமும் அழகிய முறுவலும்
காதா றிரட்டியும் கவச குண்டலமும்

பவளமேனியும் துகளறு மார்பும்
விளங்குமணி யாரமும் வீரப் ரதாபமும்
சிவாயநம வெனும் திருநீற்றுக் காப்பும்
கண்டனுக் கினிய கலைதெரி முருகன்
வேண்டார் தமை சூர்வினைக் கிளையறுத்தும்
அண்டர் பயந்தீர்த்து அமராபதி யேற்றியும்
குதிரை முகத்தின் குன்றைக் கெடுத்தும்
மதுரை நக்கீரர் வடிதமிழா ய்ந்து
முருகாற்றுப் படைத்து முகமலர்ந் தருளியும்
திருச்செவி சாத்தியும் வான்சிறை விடுத்தும்
அஞ்சினோர்க்கு முன்னடைந் தருளியும்
கவலினை யோங்காரத்தை யருளியும்
உணர்ந் துடனிற்றலும்
சரவணபவனே சண்முகா வென்றும்
சூரவணிபுயனே குமரா வென்றும்
பத்தி யடியாற்குப் பழம்பொருளளித்தும்
முத்திதா னருளும் முழுமுதற் சுடரே.

அமரர் சிறைமீட்ட ஆறிரண்டி தோளும்
தமரமிகு தண்டையுங் காளும் — குமரன்
திருக்கைவே லும்மயிலும் சிந்தித்து நெஞ்சே
இருக்கவே போமே யிடர்.

**நன்முருகாற்று முற்றிற்று.**

உ

முருகன் துணை

## அருள் முருகாற்று

அருளா ருகந்தமர்ந் தினிதிருக்கும்
தெருளார் பருவத்திரி யம்பிகை செல்வா

கங்கை மைந்தா கார்த்திகை சிறுவா
மங்கை பங்கா வழிபடு தேசிகா
வண்ண மரகத வாழ்மயில் வாகன
கண்ணன் மருகா கணபதி சகோதரா
அமையாக் கருணை அம்பிகைபுதல்வா
இமையாத் தெய்வயானைக் கிறைவா
வரிசிலை மறவர் தருகுறச் சிறுமி
பரிபுர கமல பாதசேகரா
தென்பரங் குன்றினுஞ் சீரலை வாயினும்
அன்பர் நெஞ்சத்தினும் ஆவினன் குடியினும்
அழகிய குன்று தோறுடனும் பழமுதிர்
சோலை மலையினு மாகிய வாறு
தலத்தினு மடியார் மனத்தினுங் கூறுஞ்
செருத்தணிக் குன்றெனும் பதியினும்
இனிது வீற்றிருக்கும் இறைவா போற்றி
என்று மிளைய விளையாய் போற்றி
குன்ற மெறிந்த கோவே போற்றி
வாரிதி மறுகமகபதி பிழைப்பச்
சூரனை முனிந்த சூரா போற்றி
ஆரா வமிர்தே யரசே போற்றி
சேனாபதியே சேயே போற்றி
வினைப்பகை யறுக்கும் விமலா போற்றி
நினைத்தது முடிக்கும் நிமலா போற்றி
அனைத்துள வுயிர்க்கும் ஆதி போற்றி
ஆதியு மந்தமு மில்லா வரசே
சோதியே ஞானச் சுடரே போற்றி
சரவண பவனே சண்முகா போற்றி
குரவணி புயனே குகனே போற்றி
வேந்தா போற்றி விசாகா போற்றி

சேந்தா போற்றி செட்டி போற்றி
கந்தா போற்றி கடம்பா போற்றி
சிந்தா மணியே செயசெய போற்றி
போற்றி போற்றி யென்றுனைப் புகழ்ந்து
சாற்றுவேன் திருத்தாடந் தருணமக்கே. 36

வேலும் மயிலும் விரைகடம்பும் பூங்காவும்
நாலுமென் னெஞ்சத்தே நட்டதே — கோலக்
குறிஞ்சியார் கோவைக் குமரர் கோமானை
அறிஞ்சியான் கைதொழுத வன்று.

**அருள் முருகாற்று முற்றிற்று.**

உ

முருகன் துணை

## மந்திர முருகாற்று

ஓங் அங் ஆங் றீயுங் கிலீயுங் குரோங்
ஐயுங் கிலியும் சௌவும் சரவண பவ
சத்தி புத்திராயா திரிபுரபவ
குக்குடத் துவசாய திகழொளி பவ
துவாத சடாட்சராய சயிலொளி பவ
சர்வ சத்துருராய
ஓம் நமோ குமராய நமச்சிவாய
சர்வ பூதராய கார்த்திகேசாய
கந்தா கடம்பா கயிலாய வாசா வாவா
கருணாகரதேவா வா சீக்கிரம் சீக்கிரம்
சிறீயும் றீயும் சவ்வும் அரி ஓம் சுப்பிரமணியாய
ஓம் சரவணபவ ஓம் திகழொளி பவ

ஓம் செம ணளிபவ பரிபுரபவ பவணொளிபவ
சயிலொளிபவ சரவணபவ சண்முகாய
ஆம் நமசிவாய கார்த்தி கேசா
மயூரவாகன தெய்வயானை நாயகா
வள்ளி மணவாளா ஆறுமுகவா பன்னிருகரவா
ஆடையாபரண மாலிகாபரண
அருமணி வயிரவா அபிஷேகராயா
பன்னிரு குழையும் பணிபலவாசிக்
கிரீடஞ் சூழ்ந்த கிளர்வான மெய்திய
பிறையுஞ் சிந்துர நுதலும் நவமணி வயிர
வச்சிராங்கியும்
பன்னிரு கரமும் பலவாயுதங்கள்
சங்கு சக்கரந் தன்னிரு புயமுமாய்
வச்சிராயுதமும் வயிர வாளும்
சூலமும் வேலும் துரோட்டியும் மழுவும்
சுரிகை பரிசை துணை வில்லம்பும்
கடைத்தலைப் பட்டையும் கட்டாரி சொட்டையும்
பிடித்த கரத்திடை பெருவிறற் சுற்றி
எடுத்த வாயுதங்கள் எண்ணிலக் கில்லாச்
சூரன்மார்பு துளைத்திடு வேலும்
பலவித வன்னமாய்ப் படைத்த திருமேனியும்
கச்சுடை மருங்கிற் கட்டிய வொட்டியாணமும்
சிற்றிடை யிலங்கச் சேர்த்திடு மணிபல
வன்னக் கலையும் வகுத்த தொங்கலும்
வீரதண் டையும் வெற்றிச் சிலம்பும்
சதங்கை கிண் கிணி சல சல சலென
இடும்ப னிடும்பை யெற்றிய சீர்பாதமும்
தேவர் முனிவர் சிந்தை களிப்ப
ஆதியுமையா ளன்றளித்த முருகா

அன்னை பிதாவுக் கறமறிவித்தாய்
முப்பத்து முக்கோடி தேவரிருடிகள் புடைசூழக்
காளி கூளி கணங்கள் களித்திட
ஆழியேழு மதிர் முரசார்ப்பப்
பலவாத்தியங்கள் பலவித முழங்க
வீரத்திரீகள் வெற்றி கூற
தேவத்திரீகள் தீபமெடுக்க
ஆடல் பாடல் அரம்பையர் சூழ்ந்திடப்
புட்பமாரி பொன்னுயுதிர
சந்தனங் குங்குமந் தடமணி மார்புற
வருக முருக தெய்வயானை வள்ளி
சேர்ந் திருபுறம் வர
தந்தி முன்வரத் தந்தை தாய் பின்வரக்
கொற்றக் குடையுங் கோழிக் கொடியும்
எத்திசை யெங்கும் இலங்கித் துலங்கக்
கடகரி நிழற்றக் கங்குல் துலங்க
சிறகு நிமிர்த்திப் பறவை யடக்கிச்
சிறுமரவினைக் கொத்தி யெடுத்துச்
செம்பதுமத்தான் சாய்கை நடமுற்று
வருமயில்வாகனா மால் மருகா வாழ்
வேல்முருகா நாகாசோலை வள்ளி மணவாளா
வா, வா, வந்தென் முன்னில்
இட்ட காமியங்க ளெமதுற வருளி
ஓம் அரகர ஓம் ஆம் ஈம்ஷிப சிறீயுஞ்
சிவாய நம சரவண சண்முகாய நம
ஆவினன் குடியாய நம பரங்குன்றுறைவாய் நம
பழமுதிர்சோலை மலை கிழவோனே நம
ஓங்கார றீங்கார வுருவமானாய் நம
உமைதரு புதல்வ அரிமருகா

ஒளி பல வானாய் நம
சூரபயங்கரா துட்ட நிக்கிரக
சிட்டபரிபாலா திருநோக்கிய வசிகரா நம
செந்தியிற் கந்தா நம சிறீயும் கிலீயும் குரோஞ்சவ்வும்
சந்தானசத்தி வேதச்சதாசிவ சரவண பவ
சண்முகா அரி ஓம் ஆம் ஈம் ஷிப
சிறீயும் சிவாய நம
சரவணபவ சத்தி புத்திராய வருக
முருகா குமரா வந்தென் முன்னில் என் சொற்கேள்
நானுன் வடிவு கொண்டேன்
என்னுரை உன்னுரை எனக்கே சித்தி
மந்திர சித்தி தந்திரசித்தி
சறுவலோகரும் அலங்காரமுஞ்
சறுவஸ்திரீகளும் தன தானியமும்
வஸ்திரமுத்தி எனக்கேசித்தி
தா, தா, வா, வா, பார், பார், தாக்கு, தாக்கு
சறுவ மகா துஷ்டகிரக பெல்லிவஞ்சனை சூனியங்கள்
சறுவப் பூதப் பிரேத பசாசுகள்
எய்வன எறிவன தம்பய தம்பய
காதய காதய மோதய மோதய
தாக்கு தாக்கு வீசு வீசு போடு போடு
கட்டு கட்டு இறுக்கு இறுக்கு
அப்பு அப்பு மூட்டு மூட்டு
பேசு பேசு திரி திரி விள்ளு விள்ளு
தேறு தேறு பேசு பேசு ஆவேசு ஆவேசு
அம்மை யுமையானை ஆதி பரத்தானை
ஆனைமுகவன் றன்னை
அஞ்செழுத்து மெட்டெழுத்தும்
ஐம்பத்தோரட் சரமும்

சபையி லிட்டேனுன் தான்
வெற்றிவேற் கைக்கொண்டு
வீரவாள் வீசிக் கொண்டு
உற்று நானருகே வந்து நிற்க சற்று நீ
கணியாதே சாடு சாடு வேல் கொண்டுன்
னைப்பற்றியே வெருட்டு முன்னே
பாதமே பணிவேன் கண்டாய்
சறுவசத்துரு நசி நசி சறுவ வியாதி நசி நசி
சறுவ விஷமும் நசிநசி சரவண பவ
சற்குருதேவா சம்பத்துச் சந்தான
அட்ட பலமும் தந்தே யாள்வாய்
வேல் முருகா மால்மருகா வீரதண்டைக்காலா
வாள்முருகா நாதாசோலை வள்ளி மணவாளா
வருக, முருக வருக சரணம், சரணம்
சரணார்த்தே.

பாலைப்பதி யுடையாய் பன்னிரண்டு கையுடையாய்
மாலைக்கழகு பெறுமார்புடையாய் — காலையினுஞ்
செய்யாய் மலைகிழியச் செவ்வேலெடுத் தெறியுங்
கையாய் கடைபோகக் கா.

மந்திர முருகாற்று முற்றிற்று.

## அநுபந்தம்:

உ

சிவமயம்

## 1 எதிரேற்று முருகாற்று

ஓம் சிவ சண்முகா ஓம் சிவ சிவ சண்முகா

சிகாரத்திரி கூர் வேலாயுதா
திரிபுர சண்முகா திகழொளி சண்முகா
பரிபுர சண்முகா பவனொளி சண்முகா
சயிலொளி சண்முகா சங்கு சரவண சண்முகா
சரமொருகை சிலை யொருகை
கண்ட கோடரி யொருகை
சங்கொருகை சக்கர மொருகை
சூலமொருகை சுருக்கு மொருகை
அயிலொருகை சொட்டை யொருகை
சுரிகை யொருகை ஒரு கையிற் கட்கமும்
ஒருகை வாள் செச்சைத் தொங்கலும்
சிராலணியும் பச்சை மயிலும் பணைத்தோளும்
கொச்சை மகள் பாகமும் குளிர்ந்த திருமுகத்தழகும்
கோடி சூரியப் பிரகாசமாய்
இச்சையுடனே எனக்கெதிர் வந்து
அச்சங் கெடுத்து அடியார் துதிக்கும்
பட்ச வகையும் பரிபுர ஞாணும்
கச்சையுடையும் கமல பதமும்
ஏறு ஏறு சண்முகா எரி எரி சண்முகா
மாறு மாறு சண்முகா வரி வரி சண்முகா
கண்படை கொண்டு கனத்த நீருக்கு
நான் நினைத்த சத்துருவும் எனை யெதிர்த்த பேயும்
உன்னையெதிர்த்த சூரன் உடலைக்குறைத்தாற் போல
எனையெதிர்த்த பேயும் பசாசும் பெல்லி சூனியமும்
எப்படிப்பட்ட காமத்தையும்
எரி எரி வேலா திரி திரி வேலா
கட்டு கட்டு முட்டு முட்டு குத்து குத்து
வெட்டு வெட்டு குலை குலைந்து நடு நடுங்கி
நாசமாகவே சிவாகா.

வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென வோடிக் கலங்குமே — செந்திநகர்
சேவகா வென்று திருநீ றணிவார் முன்
மேவிவாராது வினை.

எதிரேற்று முருகாற்று முற்றிற்று.

உ

முருகன் துணை

## 2 ஒரு முருகாற்று

மயிலின் பாகக் கயிலையி லிறைவர்
மாவினன் குடியி லமர்ந் தினி திருக்கும்
இருக்கும் விரிஞ்சன் அடுக்கும் பாடி
மீனவன் கானகந் தானகத் தலைவ
முத்தலை வேலனின் கைத்தலை நிருபர்
மூவர்கள் போற்றும் தேவர்க டேவர்
மெத்தும் வீபூதி யத்தக வித்தக
மேருவளை தரு சூர்கடோர் மைவ
வாகனத்து மகவை யோட
மொய்வரைப் பணிசெறி செவ்வரையாக்கி
மோக்கக் கமல மாக்கிய சரண
மவுலி யாறுள வரத சவுரியாவுள்ள மைத்துன
தந்தையு நீயு மொத்து வாழி யென்றுரைத்தோர்
பித்தராகிலும் பிறப்பிலை யவர்க்கே.

முருகவேள் சூர் மாமுதறடிந்தான் வள்ளி
புரிகுழன் மேன்மாலைபுனைந்தான் — சரணளித்தான்
மேலாய வானோர் வியன் சேனை தாங்கினன்
வேலாலி டர்கிழித் தான் வெற்பு.

ஒருமுருகாற்று முற்றிற்று.

பிரதிபேதம்:-

2

# ஒரு முருகாற்று

மயிலின் பாகக் கயிலை யிறைவர்
மாவினன் குடியுறை ஆவினன் குடியினும்
இருக்கும் விரிஞ்ச னடுக்கம் பாடி
மீனவன் கானகந் தானகத் தலைவா
முத்தலை வேல நின்கைத் தலைநிருபர்
மூவர்கள் போற்றும் தேவர்க டேவர்
மெத்தும் விபூதி யத்த வித்த
மேரு வளைதரு சூர்கொண்டோர்
மைவாக னத்து மகவை யோட
மொய்வ்வ ரைப்பணி செறிசெவ் வரையாக்கி
மோக்கக் கமல மாக்கிய சரண
மவுலியாவுள வரதசவுரி யாவுள
மைத்துனு தந்தையு நீயு
மொத்து வாழி யென்று ரைத்தோர்
பித்த ராகிலும் பிறப்பிலை யவர்க்கே.

" ஒருகால் முருகா பரமா குமரா உயிர்கா எனவே தருள் தாராய்
முருகா எனவோர் தரமோ தடியார் முடிமே லிணைதாள்
[அருள்வோனே "

உ

சிவமயம்

# சைவசமய ஞானவிருத்தி நிலயம்.

மருதகம்ஸ் அச்சகத்தால் வரும் வருமானம் யாவும் சைவ சமய ஞான விருத்திக்கே உபயோகிக்கப்படுகின்றது. உங்கள் அச்சு வேலைகளை மருதகம்ஸ் அச்சுக்கூடத்திற்குத் தந்து சமயத் தொண்டுக்கு உதவி புரியுங்கள்.

**மேலும் சைவ சமய சம்பந்தமான தோத்திரப் பாடல்கள் போன்ற சமய விருத்திக்குரிய அச்சு வேலைகள் யாவும் ஆதாயமின்றி அதற்குரிய செலவினங்களுடன் மட்டும் அச்சிட்டுத் தர ஆயத்தமா யிருக்கின்றோம்.**

சைவ சமய ஞான விருத்தி நிலயம்
மருதகம்ஸ் அச்சகம்
97. மானிப்பாய் வீதி
வண்ணார்பண்ணை.